

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.6.2025) முகாம் அலுவலகத்தில், பெரம்பூர் தெற்கு பகுதி 45வது வட்ட கழக செயலாளர் ஜி. மாரிமுத்து – சங்கீதா ஆகியோரின் மகன் விக்னேஷ் (எ) ஸ்டாலின் – தர்ஷினி ஸ்ரீமதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர், பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க. ஜெயராமன், மாவட்டத் துணை செயலாளர் கமலக்கண்ணன், கழக நிருவாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.6.2025) முகாம் அலுவலகத்தில், 9வது வார்டு கிளை செயலாளர், எம்.ஜி. சாமிநாதன் மகன் சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் முனைவர் எஸ்.நவீன்குமார் – மோனிஷா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் கே. கணபதி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் திருமதி ரேகா பிரியதர்ஷினி, முனைவர் சு. ஆனந்தராஜா, கழக நிருவாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.


### மோடி தலைமையிலான ஆட்சியில்

# விலைவாசி உயர்வால், நாட்டு மக்கள் தத்தளிப்பு!

## எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி விமர்சனம் !

புதுடெல்லி, ஜூன் 8-

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், கடந்த ஆண்டில் இருசக்கர வாகன விற்பனை 17 சதவீதமாகவும், கார் விற்பனை 8 புள்ளி 6சதவீதமாகவும் குறைந்துள்ளது.



இதேபோன்று, கைப்பேசிகளின் சந்தை 7 சதவீதம் குறைந்துள்ள தாக கூறியுள்ளார். மறுபுறம் செலவுகள் மற்றும் கடன்கள் இரண்டும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. வீட்டு வாடகை, உள்நாட்டு பணவீக்கம், கல்விச்செலவுகள், எல்லாமே விலை உயர்ந்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இவை அனைத்தும் வெறும் எண்கள் அல்ல. இவை ஒவ்வொரு சாதாரண இந்தியனும் தத்தளிக்கும் பொருளாதார அழுத்தத்தின் யதார்த்தங்கள் என்று ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு இந்தியருக்கும் வேலை செய்யும் பொருளாதாரம்தான், நமக்கு தேவை என்றும் ஒருசில முதலாளிகளுக்கு வேலை செய்யும் பொருளாதாரம் தேவையில்லை என்றும் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூகவலை தளப்பதிவில் கூறியுள்ளார்.

### ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில்

# அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் 4 புதிய கட்டிடங்கள்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

கரூர், ஜூன் 8-

கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், தலைமையில், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர். இளங்கோ முன்னிலையில் விழா நடைபெற்றது.

வி.செந்தில்பாலாஜி கூறுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.அதேபோன்று நவீன காலத்திற்கு ஏற்றவாறு பொது மக்களுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் நிதியினை சீராக வழங்கியுள்ளார்கள்.

அந்த வகையில் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் ரூ. 28 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய வகுப்பறை கட்டிடம் மற்றும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறையும். மொஞ்சனூர் ஊராட்சி தொட்டியபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ.20 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட வகுப்பறை கட்டிடத்தையும்,

கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பாக, சின்னதாராபுரத்தில் நபார்டு திட்டத்தின் மூலம் ரூ.53.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கால்நடை மருத்துவமனையும் மற்றும் சின்னதாராபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வகுப்பறை கட்டிடத்தையும் என மொத்தம் ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 5 புதிய கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதென வி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.சாந்தி. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) செல்வமணி. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணன், பொதுப்பணித் துறை (கட்டடம்) சுஜாதா, வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, வட்டாட்சியர்கள் மகேந்திரற், தனசேகர். பள்ளி ஆசிரியர்கள். மாணவர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியம் நீர்முளை ஊராட்சியில் வாய்க்கால் தூர் வாரும் பணியினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என்.கௌதமன், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார் மற்றும் பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான செம்மொழி நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகளில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலகுழுத் தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி வழங்கினர். இதில் மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் பிறந்தநாள் செம்மொழிநாள் விழா!

# திருவாரூர் தியாகராஜர் திருக்கோவிலில் பரதநாட்டிய இசை நிகழ்ச்சி!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அறிக்கை!

திருவாரூர், ஜூன் 8-

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா செம்மொழி நாளாகா தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடு திருவாரூர் மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோவிலில் 08.06.2025 ஞாயிறு மாலை 5.30க்கு நடைபெறும் மாபெரும் பரத நாட்டிய இசை நிகழ்ச்சிக்கு மாவட்ட தி.மு.க. கழகம் சார்பில் அழைப்பு விடுத்து மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.



அவர்தம் அறிக்கையில் தெரித்திருப்பதாவது:-

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கித்தந்த நமது திருவாரூர் மாவட்டம் இந்திய துணைக்கண்டமே வியக்கும் அளவுக்கான கட்டமைப்புக்களை திராவிட முன்னேற்றக்கழகத்தில் நல்லாட்சியில் பெற்றிருக்கிறது. திரு.வி.க. கல்லூரி தொடங்கி மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி கல்லூரிகள் மற்றும் மத்திய பல்கலை கழகம் என கல்வியிலும், பிரமாண்ட மாவட்ட ஆட்சியர் வளாகம், நகராட்சி அலுவலக வளாகம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், நவீன பேருந்து நிலையம் என கட்டமைப்பு வசதிகளிலும், பிரமாண்ட வணிகவளாகம் உழவர் சந்தை என பொருளாதாரத்திலும், அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என சுகாதாரத்திலும், தஞ்சை, நாகை, நாகூர், முத்துப்பேட்டை, மன்னார்குடி, கும்பகோணம் என அனைத்து நகரங்களையும் இணைக்கும் சாலைவசதி மற்றும் பேருந்து வசதிகள் எனபோக்குவரத்து துறையிலும் இப்படி எல்லாத்துறைளை களிலும் முன்னணி பெற்ற மாவட்டமாக திருவாரூரை உருவாக்கிய பெருமைகள் கலைஞர் அவர்களுக்கு உண்டு.

தான் பெரியாரின் சீடராய், பகுத்தறிவு சிந்தனை வாதியாய் அரசியலில் கோலோச்சி மக்களின் நன்மதிப்பை பெற்றிருந்தாலும், கலைஞர் அவர்கள் ஆன்மீகத்தின் மீது நம்பிக்கை கொண்ட அனைத்து மக்களின் எண்ணங்களுக்கும் மதிப்பளித்து, பல வருடங்கள் ஓடாமல் கிடந்த புகழ் பெற்ற திருவாரூர் ஆழி தேரை ஓடச்செய்த பெருமை கொண்டவர. அதோடுமட்டுமல்லாமல் தேரோடும் வீதிகளை கான்க்ரீட் சாலைகளாக மாற்றவும், அந்த வழிகளில் மின்பாதைகளை புதைவிட மின்பாதைகளை மாற்றிடவும் பேருதவி புரிந்து மக்களின் நன்மதிப்பை பெற்றிருப்பவர் கலைஞர்.

அப்படிப்பட்ட மகத்தானா மாமனிதருக்கு நன்றி செலுத்துகின்ற வகையில், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளாம் செம்மொழி நாளை சிறப்பிக்கின்ற வகையில்,திருவாரூர் தியாகராஜாசுவாமி திருக்கோவிலில் மன்னார்குடி ஸ்ரீ நடராஜர் நாட்டிய வித்யாலயா நாட்டியப் பள்ளி மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்வும், திருவாரூர் விகாஷ் வர்ணா நிறுவனத்தின் சார்பில் இசை நிகழ்ச்சியும் பிரமாண்டமாய் 08.06.2025 ஞாயிறு மாலை 5.30க்கு நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கு அனைவரும் வருகை தந்து மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் பெருமைசேர்த்திட வேண்டுமாய்திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அழைக்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான “செம்மொழி நாளை” முன்னிட்டு 1971 ஆம் ஆண்டு கோவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் பீளமேடு பகுதி 2, பாப்பநாயக்கன் பாளையத்தில் 500 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் வழங்கினார். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கல்பனா செந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியம், பொதுக்குழு உறுப்பினர் இரா.மணிகண்டன், பீளமேடு பகுதி 2 செயலாளர் மா.நாகராஜ், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், மாணவர் அணி அமைப்பாளர் சிவப்பிரகாஷ், வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஜே.தாஸ், ப.மோகன்ராஜ், கே.ஆனந்தகுமார், அவைத்தலைவர் பா.மா.கிருஷ்ணமூர்த்தி, கழக நிர்வாகிகள் ஆடிட்டர் ராஜேந்திரன், இரா.நாகராஜ், கேபிள் ராஜேந்திரன், கேபிள் சேகர், எஸ்.டி.சரவணன், ஸ்டிக்கர் துரை, சந்திரசேகர், ராஜ்குமார், மணி, மகளிரணி வசந்தி, சரஸ்வதி, மணிமேகலை, சண்முகவடிவு, பரிமளம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



செம்மொழி நாள் ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மின்வாரிய தலைமை அலுவலகத்தில் மின்கழகத் தொ.மு.ச. சார்பாக தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்கள், பொதுமக்கள் என 300 பேர்களுக்கு 1500 ரூபாய் மதிப்புள்ள நல உதவிகளை சங்கப் பொதுச் செயலாளர் / தொ.மு.ச. பேரவை இணை பொதுச் செயலாளர் மணிமாறன் சங்க நிர்வாகிகள் முன்னிலையில் வழங்கினார்கள்.